நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.208/2023

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெள்ளையன் |
| தந்தை / கணவர் பெயர் | : | தண்டபாணி |
| கிராமம் | : | பாலமலை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW5 |
| வயது | : | 56 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 11–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.15PM

1. நான் தற்போது பாலமலையில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராமசாமி எனக்கு உறவினர் ஆவார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மாலை 05.30 மணியளவில் 3 எதிரிகளும் அ.சா.1 ஐ பொது வழியில் தடுத்து அடித்து புதரில் தூக்கி எறிந்துவிட்டார்கள். அடுத்தநாள் காலையில் வரை

அந்த புதரில் இருந்துள்ளார். அதற்கு பின்பு எனக்கு தகவல் கிடைத்து நான் காவல் துறைக்கு சென்று தெரிவித்தேன்.

2. அ.சா.1 ஐ நான்தான் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். மூங்கில் வெட்டுவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு எதிரிகள் அ.சா.1 ஐ அடித்துவிட்டனர்.போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. மேற்படி எதிரிகள் அ.சா.1 ஐ அடித்துவிட்டதாக எங்கள் ஊர் மணியக்காரர் முத்து என்பவர் சொல்லித்தான் எனக்கு தெரியும். அ.சா.1 ஐ நான் தான் மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேரச்சொன்னேன். நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

4. சம்பவம் பற்றி எனக்கு மறுநாள் காலையில்தான் தெரியும். நான் திராவிட கழகம் கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எங்கள் ஊரில் நான் அ.சா.1 ஐ மருத்துவமனையில் சேர்த்தது போல பல பஞ்சாயத்துக்கள் நியாயங்களை செய்து கொண்டு வந்தேன் என்றால் சரிதான்.

5. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அப்பொழுதும் தற்போது நீதிமன்றத்தில் சொன்னவாறுதான் சொன்னேன். எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் முன்விரோதம் இருந்தது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 ஐ நான் ஜீப்பில் வைத்து மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். அந்த ஜீப் வழக்கமாக கண்ணாமூச்சி வரை தான் வரும் என்றால் சரிதான். அன்றைய தினம் மேட்டூர் அரசு மருத்துவமனை வரை கொண்டு விடச்சொன்னேன்.

6. போலீசார் பாலமலைக்கு இந்த சம்பவம் தொடர்பாக வரவும் இல்லை. எந்த ஒரு சாட்சியையும் விசாரணை செய்யவும் இல்லை. ராமசாமி எனக்கு நன்கு தெரிந்தவர் என்றால் சரிதான். சம்பவத்தின்போது ஆஜர் எதிரிகளில் 2 வது எதிரி விஜயகுமார் மற்றும் 3 வது எதிரி இளையராஜா ஆகியோர் திருப்பூரில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

7. மேற்படி இருவரும் திருப்பூரில் மதிப்பு மிகுந்த வேலையில் இருக்கிறார்கள் என்றாலும் நான்தான் வேண்டுமென்றே அவர்களை வழக்கில் சேர்க்க சொன்னேன் என்றாலும் சரியல்ல. சாட்சி தற்போது மேற்படி நபர்கள் இரண்டு ஒருவாரம் இங்கு வந்து தங்கியிருப்பார்கள் என்றும் அந்த சமயத்தில் தான் இந்த சம்பவம் நடைபெற்றதாக மாற்றி சாட்சியம் அளிக்கிறார்.

8. நான் தற்போது நீதிமன்றத்தில் மாற்றிமாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது ஒரு பொய்யான வழக்கை போலீசாரிடம் நான் தான் கொடுக்க சொன்னேன் என்றாலும் அ.சா.1 எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் எதிரிகளின் மீது அ.சா.1 க்கு இருக்கும் முன்விரோதம் தொடர்பாக எதிரிகள் மீது ஒரு பொய் வழக்கு கொடுத்து அதன்மூலம் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.30PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**